**Series BRH**

**Code No. 10**

Roll No. | | | | | | | |

Candidates must write the Code on the title page of the answer-book.

- Please check that this question paper contains **19** printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **19** questions.
- **Please write down the Serial Number of the question before attempting it.**
- 15 minutes time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

# SUMMATIVE ASSESSMENT – II

# தமிழ்

# TAMIL

*நேரம் : 3 மணி* — *மதிப்பெண்கள் : 80*

*Time : 3 hours* — *Maximum Marks : 80*

**இக் கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது :**

**The question paper is divided into four Sections :**

| | | |
|---|---|---|
| பிரிவு அ | படித்தல் (உரைநடைப்பகுதி) | *15 மதிப்பெண்கள்* |
| **SECTION A** | Reading Comprehension | *15 Marks* |
| பிரிவு ஆ | எழுதுதல் | *15 மதிப்பெண்கள்* |
| **SECTION B** | Writing | *15 Marks* |
| பிரிவு இ | இலக்கணம் | *15 மதிப்பெண்கள்* |
| **SECTION C** | Grammar | *15 Marks* |
| பிரிவு ஈ | இலக்கியம் / தமிழ்ப் பாடநூல்கள் | *35 மதிப்பெண்கள்* |
| **SECTION D** | Literature / Text Books | *35 Marks* |

**1.** பின்வரும் பகுதியைப் படித்துத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு ஏற்ற விடைகளை எழுதுக : *5*

நிலத்திலும் நீரிலும் வசிக்கும் மீன்களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா ? நுரையீரல் மீன் என அழைக்கப்படும் இவ்வகை மீன்கள் நன்னீரிலும் நிலத்திலும் வாழும் இயல்புடையவை. இவ்வகை மீன்கள் அதிகம் காணப்படுவது தென் அமெரிக்க நாட்டில் தான். இவ்வகை மீன்கள் 4.10 அடி நீளம்வரை வளரும். மண்ணுக்குள் நான்கு ஆண்டுகள் வரை உயிர்வாழும். நீரில் இருக்கும் போது மற்ற மீன்களைப் போல சுவாசிக்கும். தரையிலும் சுவாசிக்கும். நீர்வற்றும் போது அங்குள்ள சேற்றில் வளை தோண்டித் தங்கும். 35 முதல் 50 செ.மீ. ஆழம் வரை வளைதோண்டி அதன் மேற்பகுதியில் சிலதுளைகள் இடும். வளையில் வாழும்போது அத்துளைகள் மூலம் சுவாசிக்கும். மழைக்காலம் வரும்போது வளையிலிருந்து வெளிவந்து நன்னீரில் வசிக்கும். இந்த மீன்கள் நீரிலும் நிலத்திலும் வாழச் செய்துள்ளது இயற்கையின் அதிசயங்களில் ஒன்று என்றே சொல்லவேண்டும்.

**வினாக்கள் :**

(i) நிலத்திலும் நன்னீரிலும் வாழும் மீன் எது ?

(அ) இரால் மீன்

(ஆ) திமிங்கிலம்

(இ) நுரையீரல் மீன்

(ஈ) வாளை மீன்

(ii) நுரையீரல் மீன்கள் நன்னீரில் எப்போது வசிக்கும் ?

(அ) குளிர் காலத்தில்

(ஆ) இளவேனிற் காலத்தில்

(இ) கோடைகாலத்தில்

(ஈ) மழைக்காலத்தில்

(iii) அதிக அளவில் நுரையீரல் மீன் எங்கு காணப்படுகிறது ?

(அ) இலங்கையில்

(ஆ) தென் அமெரிக்க நாட்டில்

(இ) சீனாவில்

(ஈ) ஆப்பிரிக்க நாட்டில்

(iv) சேற்றில் நுரையீரல் மீன் எவ்வளவு ஆழம் வரை வளை தோண்டும் ?

(அ) 10 முதல் 20 சென்டி மீட்டர்

(ஆ) 100 சென்டி மீட்டர்

(இ) 35 முதல் 50 சென்டி மீட்டர்

(ஈ) ஒன்றுமுதல் ஐந்து சென்டி மீட்டர்

(v) நிலத்தில் நுரையீரல் மீன்கள் எவ்வகையில் சுவாசிக்கும் ?

(அ) வளைக்கு வெளியே வந்து

(ஆ) வளைகளின் மேற்பகுதியில் உள்ள துளைகளின் வழியே

(இ) நீரில் மட்டுமே சுவாசிக்கும்

(ஈ) மற்ற மீன்களைப் போல சுவாசிக்கும்

2. பின் வரும் பத்தியைப்படித்து அதன் கீழ் கொடுக்கப்பட்ட பல்விடை வினாக்களுக்கு விடை எழுதுக : 5

வாசிப்பது வளமான பொழுதாக்கம். விழிகள் எவ்வளவு வாசித்தாலும் கண்கள வீங்குவதில்லை. மூளை தளர்வதில்லை. ஒவ்வொரு நூலும் பல்லாண்டு அனுபவத்தால் தோன்றிய வித்துக்கள். வீரியமுள்ள அவை தரமான இதயமாகிய நிலத்தில் விழுந்தால் வளர்ந்து பூத்துக்குலுங்கிப் பூமிக்கே அறிவு எனும் நிழல் தருகின்றன. நல்ல நூல்களைக்கூடப் "படிக்கநேரமில்லை" எனப் புலம்புவது சோம்பல்தனமேயாகும். புத்தகங்கள் விலையதிகம் எனச்சொல்பவர்களும் உண்டு. உலகிலேயே நல்லதரமான நூல்கள் குறைவான விலையில் கிடைப்பது இத்தமிழகத்தில் தான். வயிற்றுப்பசியைப் போக்கக் குறைந்த விலையில் தரமான உணவும், அறிவுப்பசிக்குத் தரமான நூல்களும் கிடைக்கும் தமிழகத்தில் பணத்தைச் செலவுசெய்து அறிவைச் சேமிப்பது விரயம் அல்ல, முதலீடு. ஒவ்வொரு மனிதனின் சாதனைக்கும் அவன் படித்த நூல்களே காரணமாக உள்ளன. பூக்கள் இல்லாத பூங்காக்களையும் புத்தகங்கள் படிக்காத அறிவு ஜீவிகளையும் பற்றி நினைத்தால் நெஞ்சம் பதைக்கும். எழுத்தும் பேச்சும், கவிதையும் கலையுமே மனித நாகரிகத்தின் வெளிப்பாடு. படிப்பதால் பாறைபோன்ற நம்மனம் பஞ்சு போல மென்மையாகிறது. புத்தக வாசிப்பால் பரந்த அறிவு பெற்றிடவும் வாழ்வு பண்பட்டுச் சிறக்கவும் முடியும் என்பது காலம் கண்ட உண்மையாகும்.

**வினாக்கள் :**

(i) மனித நாகரிகத்தின் வெளிப்பாடு எது ?

(அ) ஆடை மற்றும் அணிகலன்கள்

(ஆ) வாழுமிடமும் செல்வமும்

(இ) எழுத்தும் பேச்சும் கவிதையும்

(ஈ) வீரமும் விவேகமும்

(ii) அறிவு என்னும் நிழல் தரும் மரங்களின் விதைகள் எவை ?

(அ) அறிஞர்களின் வரலாறுகள்

(ஆ) படைப்பாளிகளின் அனுபவத்தால் தோன்றிய நூல்கள்

(இ) செல்வர்களின் ஊக்குவிப்பு

(ஈ) வாழ்வின் அனுபவங்கள்

(iii) நூல்களைப் படிப்பதால் ஏற்படும் விளைவு என்ன ?

(அ) நேரம் வீணாகும்

(ஆ) பாறை போன்ற மனித மனம் பஞ்சு போல் மென்மையாகும்

(இ) பணம் செலவாகும்

(ஈ) அறிவு குறையும்

(iv) எது சோம்பல் தனமாகும் ?

(அ) அதிகநேரம் தூங்குவது

(ஆ) அதிகநேரம் உழைப்பது

(இ) நூல்களைப்படிக்க நேரமில்லை எனப் புலம்புவது

(ஈ) ஏதும் செய்யாமல் இருப்பது

(v) எது சிறந்த முதலீடாகும் ?

(அ) பணத்தைச் செலவழித்து நூல்களை வாங்கி அறிவைப் பெருக்குவது

(ஆ) வாணிகத்தில் நல்ல வகையில் பணம் செலவு செய்வது

(இ) நன்றாக உண்டு உறங்கப் பணம் செலவு செய்வது

(ஈ) வட்டிக்குப் பணம் கொடுப்பது

**3.** பின்வரும் பத்தியைப் படித்து, கீழே கொடுக்கப்பட்ட பல்விடை வினாக்களுக்கு விடைதருக :

மத்திய ஐரோப்பாவில் பெரும்பாலும் மலைகளால் சூழப்பட்ட பெரும் பணக்கார நாடுதான் ஸ்விட்சர்லாந்து. 1291 ம் ஆண்டு உருவான இந்நாடு, கைக்கடிகாரங்கள் மற்றும் சுவர்க்கடிகாரங்களுக்கு மிகவும் புகழ்பெற்றது. இந்நாட்டிற்கென்று தேசியமொழி கிடையாது. ஸ்விஸ், ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலியன் முதலிய மொழிகள் இங்கு பேசப்படுகின்றன. 26 மாநிலங்களைக் கொண்ட இந்நாடு உலகில் மிகச்சிறந்த கல்வியளிக்கும் நாடுகளில் ஒன்றாகும். கல்விக்கட்டணம் இந்நாட்டில் மிகவும் அதிகம். இந்நாட்டில் 11 பல்கலைக் கழகங்கள் உள்ளன. ரொட்டி மற்றும் பால்பொருள்கள்தான் இந்நாட்டுமக்களின் பெரும்பாலான உணவாக உள்ளன. பாலும் தேனும் ஸ்விஸ் மக்களுக்குப் பிடித்தமான உணவாகும். 2002 ஆம் ஆண்டு ஐக்கியநாடுகளின் உறுப்பினராக ஆன ஸ்விட்சர்லாந்து மற்ற நாடுகளுக்குள் நடக்கும் போர்களில் நடுநிலை வகிக்கும் கூட்டுச்சேரா நாடாகவே விளங்கிவருகிறது. உலகமக்கள் பலர் தமது டணத்தை ஸ்விஸ் வங்கிகளில் சேமித்து வைத்துள்ளது உலகறிந்த ஒன்று. இந்நாட்டின் ஐஸ்மலைகள் குறைந்துகொண்டே வருவது விஞ்ஞானிகளையும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களையும் கவலைக்குள்ளாக்கி வருகிறது. இயற்கை அழகும் செல்வமும் மிக்க ஸ்விட்சர்லாந்து உலகில் சிறந்த இடம் பெற்றுள்ளது என்பதில் வியப்பேதும் இல்லை.

**வினாக்கள் :**

(i) ஸ்விட்சர்லாந்து நாடு எப்போது உருவானது ?

(அ) 1352 ஆம் ஆண்டு

(ஆ) 1291 ஆம் ஆண்டு

(இ) 1752 ஆம் ஆண்டு

(ஈ) 1500 ஆம் ஆண்டு

(ii) ஸ்விட்சர்லாந்து எந்தக் கண்டத்தில் உள்ளது ?

(அ) ஆப்பிரிக்கக் கண்டத்தில்

(ஆ) ஆசியக்கண்டத்தில்

(இ) மத்திய ஐரோப்பாவில்

(ஈ) அமெரிக்கக்கண்டத்தில்

(iii) ஸ்விஸ் மக்களின் முக்கிய உணவுகள் எவை ?

(அ) மீனும் தேனும்

(ஆ) பால்பொருள்களும் ரொட்டியும்

(இ) பழங்கள்

(ஈ) தாவர உணவுகள்

(iv) ஸ்விஸ் நாடு எத்தனை மாநிலங்கள் கொண்டது ?

(அ) 26

(ஆ) 20

(இ) 11

(ஈ) 8

(v) ஸ்விட்சர்லாந்து எவைகளால் சூழப்பெற்றது ?

(அ) கடல்களால்

(ஆ) மலைகளால்

(இ) நீர்நிலைகளால்

(ஈ) பாலை வனங்களால்

## பகுதி ஆ

4. மக்களாட்சி மேம்படத் தேர்தலில் வாக்களிக்க வேண்டியது முதற்கடமை என்பதை உன் மாமனுக்கு விளக்கும் கடிதம் எழுதுக.

**அல்லது**

நீ வாழும் பகுதியில் சாலை மேம்பாடு, குடிநீர்வசதி ஆகியவற்றைச் சீர் செய்யப் பொதுப்பணித்துறை அதிகாரிக்குக் கடிதம் எழுதுக.

உமது முகவரி நன்மாறன்/பூரணி 33 அங்கயற்கண்ணிதெரு மயிலாப்பூர், சென்னை - 600004 எனக் கொள்க.

5. ஏதேனும் ஒருபகுதியில் கொடுக்கப்பட்ட குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

(அ) இந்தியாவின் குடியாட்சிக்கொள்கை — எம்மதமும் சம்மதம் — மதவெறிக்கு மக்கள் செவிசாய்த்தல் — வன்முறை — உயிர், பொருட் சேதம் — விழிப்புணர்வும் விவேகமும் — ஒன்றுபட்ட வாழ்க்கை.

(ஆ) பெருகிவரும் போக்குவரத்துச் சாதனங்கள் — சாலைவிதிகள் — வேகமும் சோகமும் — போக்குவரத்து விதிகளில் கடுமையான நடவடிக்கை — விபத்தில்லாத பயணம்.

(இ) இந்தியா விவசாய நாடு — விவசாய நிலங்கள் கட்டடங்களாதல் — விவசாயத்தில் ஏற்படும் இயற்கைச்சீற்றங்கள் — ஏழ்மையில் விவசாயி — அரசின் நலத்திட்டங்கள் அடிமட்ட விவசாயிகளுக்குச் சேர்ந்திடத்தடைகள் — போதிய விலை கிடைக்க விடாத இடைத்தரகர்கள் — தடைகளை ஒழிக்க அரசின்கடுமையான நிர்வாகம் — விவசாயம்பெருகுதல்.

**6.** உமது பகுதியில் நடைபெற்ற இரத்ததானம், கண்தானம் பற்றிய விழிப்புணர்வு முகாம் பற்றி ஓர் அறிக்கை எழுதுக. *3*

**அல்லது**

நாட்டுப் பாதுகாப்புப்பணிக்கு இராணுவத்தில் ஆள் சேர்க்க நீ வாழும் பகுதியில் நடைபெற்ற முகாம் பற்றி ஓர் அறிக்கை எழுதுக.

## பகுதி இ

**7.** சான்று தருக (எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும்) *3*

(i) இயல்புப் புணர்ச்சி

(அ) பற்பல

(ஆ) கணிப்பொறி

(இ) கயல்விழி

(ஈ) மேனாடு

(ii) பிறிது மொழிதல் அணி

(அ) நாகமது நாகமுற நாகமென நின்றான்

(ஆ) நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்

(இ) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்

(ஈ) தேவர் அனையர் கயவர் அவருந்தாம் மேவன செய்தொழுக லான்

(iii) கெடுதல் விகாரம்

(அ) மணிக்கொடி

(ஆ) சரவெடி

(இ) பூஞ்சோலை

(ஈ) சொற்பொருள்

(iv) மகர ஈற்றுப் புணர்ச்சி

(அ) அகநானூறு

(ஆ) மலையருவி

(இ) தேங்கனி.

(ஈ) வளிமண்டலம்

(v) திசைப்புணர்ச்சி

(அ) வெளிநாடு

(ஆ) தென்னாடு

(இ) கடலலை

(ஈ) வானுலகு

**8.** நிரப்புக (எவையேனும் **மூன்றுமட்டும்**) *3*

(i) அகத்திணைகள் மொத்தம் ______ வகைப்படும்.

(அ) ஐந்து

(ஆ) நான்கு

(இ) ஏழு

(ஈ) ஆறு

(ii) குறிஞ்சி நிலம் என்பது ______ .

(அ) கடலும் கடல்சார்ந்ததுமாகும்

(ஆ) மலையும் மலைசார்ந்ததுமாம்

(இ) வயலும் வயல் சார்ந்ததுமாம்

(ஈ) சுரமும் சுரஞ்சார்ந்ததுமாம்

(iii) அகம் புறம் இரண்டும் ______ இலக்கணம் ஆகும்.

(அ) சொல்

(ஆ) அணி

(இ) யாப்பு

(ஈ) பொருள்

(iv) வெண்பா என்பது ______ பெற்று வரும்.

(அ) கலித்தளையும் வஞ்சித்தளையும்

(ஆ) ஒன்றாவஞ்சித்தளையும் கலித்தளையும்

(இ) ஆசிரியத்தளை பெற்றுவரும்

(ஈ) இயற்சீர் வெண்டளையும் வெண் சீர்வெண்டளையும்

(v) மருத நிலக் கடவுள் ______ .

(அ) முருகன்

(ஆ) திருமால்

(இ) இந்திரன்

(ஈ) வருணன்

**9.** கூறியவாறு செய்க. (எவையேனும் **மூன்றுமட்டும்**) *3*

(i) கடல் + அலை (சேர்த்தெழுதுக)

(அ) கடலை

(ஆ) கடலலை

(இ) கடலவலை

(ஈ) கடவாலை

(ii) பைங்கிளி (பிரித்து எழுதுக)

(அ) பச்சை + கிளி

(ஆ) பை + கிளி

(இ) பசுமை + கிளி

(ஈ) பைங் + கிளி

(iii) கடுநடை (சொல்லைப் பிரித்து எவ்வகைப்புணர்ச்சி என எழுதுக)

(அ) கடு + நடை (முற்றியலுகரப்புணர்ச்சி)

(ஆ) கடுமை + நடை (பண்புப் புணர்ச்சி)

(இ) கடும் + நடை (ஈறு கெடுதல் புணர்ச்சி)

(ஈ) கடுகு + நடை (குற்றியலுகரப்புணர்ச்சி)

(iv) எல்லார்க்கும் (அசை பிரித்து வாய்பாடு கூறுக.)

(அ) நேர் நேர் நேர் ______ தேமாங்காய்

(ஆ) நேர் நிரை நேர் ______ கூவிளங்காய்

(இ) நிரை நிரை நேர் கருவிளங்காய்

(ஈ) நேர் நேர் நிரை ______ தேமாங்கனி

(v) பைங்கனி (அளவுப் பண்புப் பெயர்ப்புணர்ச்சியாக்குக)

(அ) தீங்கனி

(ஆ) செங்கனி

(இ) முக்கனி

(ஈ) பெருங்கனி

**10.** இலக்கணக்குறிப்புத் தருக. (**மூன்றுமட்டும்**) *3*

(i) வடமொழி

(அ) மகரவீற்றுப்புணர்ச்சி

(ஆ) திசைப்பெயர் புணர்ச்சி

(இ) திரிதல் விகாரப்புணர்ச்சி

(ஈ) பண்புப்புணர்ச்சி

(ii) வாரிக்களத் துடிக்கும் வந்துபின்பு கோட்டை புகும்
போரில் சிறந்து பொலிவாகும்-சீருற்ற
சேக்கோலமேனித் திருமலைராயன் வரையில்
வைக்கோலும் மால்யானை யாம்

(அ) வஞ்சப்புகழ்ச்சியணி

(ஆ) தற்குறிப்பேற்ற அணி

(இ) சொற்பின் வருநிலையணி

(ஈ) செம்மொழிச்சிலேடையணி

(iii) கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

(அ) நேரிசை வெண்பா

(ஆ) இன்னிசை வெண்பா

(இ) சிந்தியல் வெண்பா

(ஈ) ஒருவிகற்பக் குறள்வெண்பா

(iv) மலைக் கோட்டை

(அ) தோன்றல் விகாரம்

(ஆ) கெடுதல் விகாரம்

(இ) இயல்புப்புணர்ச்சி

(ஈ) திரிதல் விகாரம்

(v) இயற்கையாய் நிகழும் நிகழ்ச்சியில் தம் கற்பனைக் கருத்தை ஏற்றிக் கூறுவது

(அ) வஞ்சப்புகழ்ச்சியணி

(ஆ) சொற்பின் வருநிலையணி

(இ) செம்மொழிச்சிலேடையணி

(ஈ) தற்குறிப்பேற்ற அணி

**11.** சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க (**மூன்றுமட்டும்**) *3*

(i) (அ) வெண்பாவின் இலக்கணத்துடன் ஐந்தடிமுதல் பன்னிரண்டு அடிகள் அமைய வருவது சிந்தியல் வெண்பா

(ஆ) வெண்பாவின் பொது இலக்கணத்துடன் ஐந்தடிமுதல் பன்னிரண்டு அடிவரை அமையப் பெற்றுவருவது இன்னிசைவெண்பா

(இ) வெண்பாவின் பொது இலக்கணத்துடன் ஐந்தடிமுதல் பன்னிரண்டு அடிவரைப் பெற்றுவருவது பஃறொடை வெண்பா

(ஈ) வெண்பாவின் பொது இலக்கணத்துடன் ஐந்துமுதல் பன்னிரண்டு அடிகள்வரைப் பெற்றுவருவது நேரிசை வெண்பா

(ii) (அ) ஆசிரியப்பா ஆறுவகைப்படும்

(ஆ) ஆசிரியப்பா எட்டுவகைப்படும்

(இ) ஆசிரியப்பா நான்குவகைப்படும்

(ஈ) ஆசிரியப்பா இருவகைப்படும்

(iii) (அ) இருபொருளிலும் சொல் ஒன்றாய்ப்பொருள் மட்டும் வேறுபடுவது செம்மொழிச்சிலேடை

(ஆ) இருபொருள்களிலும் சொல் ஒன்றாய்ப் பொருள் மட்டும் வேறுபடுவது பிரிமொழிச்சிலேடை

(இ) இருபொருள்களிலும் சொல் ஒன்றாய்ப்பொருள்மட்டும் வேறுபடுவது வஞ்சப்புகழ்ச்சி

(ஈ) இருபொருள்களிலும் சொல் ஒன்றாய்ப்பொருள்மட்டும் வேறுபடுவது பிறிதுமொழிதலணி

(iv) (அ) மாமுன் நிரை விளமுன்நேர் வருவது — வெண்சீர்வெண்டளை

(ஆ) மாமுன் நிரை விளமுன் நேர் வருவது — இயற்சீர்வெண்டளை

(இ) மாமுன் நிறை விளமுன் நேர் வருவது — கலித்தளை

(ஈ) மாமுன் நிறை விளமுன் நேர் வருவது — நேர் ஒன்றாசிரியத் தளை

(v) (அ) நிலமாகிய முதற்பொருள் ஐந்துவகைப்படும்

(ஆ) நிலமாகிய முதற்பொருள் இருவகைப்படும்

(இ) நிலமாகிய முதற்பொருள் ஈரேழ்வகைப்படும்

(ஈ) நிலமாகிய முதற்பொருள் நால்வகைப்படும்

## பகுதி ஈ

**12.** பின்வரும் பகுதியைப் படித்துத் தொடர்ந்துவரும் பல்விடை வினாக்களுக்கு விடைதருக : *5*

உலகம் என்னும் தமிழ்ச்சொல் உலவு என்னும் சொல்லின் அடியாய்ப் பிறந்தது. உலவு என்பது சுற்றுதல் எனும் பொருள் பெறும். உலகம் தன்னையும் ஞாயிற்றையும் சுற்றிவருகிறது என்பது அறிவியலார் கருத்து. ஞாலம் என்னும் தமிழ்ச்சொல் ஞால் என்பதன் அடியாய்ப் பிறந்தது. ஞால் என்பதற்குத் தொங்குதல் என்பது பொருள். எவ்விதப் பற்றுக்கோடும் இன்றி அண்ட வெளியில் உலகம் தொங்கிக் கொண்டுள்ளது. வானத்தில் காற்றில்லாப் பகுதியும் உண்டு. இதனை வறிது நிலைஇய காயமும் என்ற புறநானூற்றுப் பாடலடி உணர்த்தும்.

(i) உலகம் என்பது எச் சொல்லடியாகப் பிறந்தது ?

(அ) ஞாலம்

(ஆ) அவனி

(இ) உள்ளது

(ஈ) உலவு

(ii) ஞால் என்பதன் பொருள் யாது ?

(அ) சுற்றுதல்

(ஆ) ஒளிர்தல்

(இ) விலகல்

(ஈ) தொங்குதல்

(iii) பூமியின் இயல்பு யாது ?

(அ) வானத்தில் உள்ளது

(ஆ) தன்னையும் சுற்றிச்சூரியனையும் சுற்றுகிறது

(இ) சூரியன் பூமியைச் சுற்றுகிறது

(ஈ) எதுவும் சுற்றுவதில்லை

(iv) “வறிது நிலைஇய காயமும்” இச்சொற்றொடர் இடம்பெற்றநூல்

(அ) அகநானூறு

(ஆ) கலித்தொகை

(இ) குறுந்தொகை

(ஈ) புறநானூறு

(v) உலகம் என்பது எம்மொழிச்சொல்

(அ) வடமொழி

(ஆ) தமிழ்

(இ) கிரேக்கம்

(ஈ) இலத்தின்

**13.** கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து, தொடர்ந்துவரும் பல்விடை வினாக்களுக்கு விடைதருக : 5

வள்ளலார் இறைவன் ஒருவனே. அவன் ஒளிவடிவினன் என்பர். அருட்பெருஞ்சோதியாக விளங்கும் இறைவனை அடைவதற்குத் தனிப் பெருங்கருணையே கருவி என்பதை உணர்த்த உலகமக்களுக்கு சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை வடலூரில் நிறுவினார். ஜாதி, சமய, இன வேறுபாடு கூடாது, எவ்வுயிரையும் கொல்லாமை, புலால் உண்ணாமை களை ஆகியவை வலியுறுத்தினார். எல்லா உயிர்களையும் தம்மைப்போல் எண்ண வேண்டும், ஏழைமக்களின் பசியைப் போக்குதல் வேண்டும், உலகமக்கள் அனைவரையும் உடன் பிறப்புகளாய் நேசிக்க வேண்டும் என்பன அச்சங்கத்தின் நோக்கங்கள். உயிரிரக்கமே பேரின்ப வீட்டின் திறவு கோல் - கடவுளின் பெயரால் உயிர்க்கொலை செய்வது கூடாது என்றார் வள்ளலார். போரினால் உண்டாகும் கொடுமைகளை அறிந்து வருந்திய அருட் பெருஞ்சோதி வள்ளலார் போரில்லா உலகைப்படைக்க விரும்பினார்.

(i) இறைவன் எத்தகைய வடிவினன் ?

(அ) அன்பின்வடிவினன்

(ஆ) ஆற்றல் வடிவின்

(இ) ஒளி வடிவினன்

(ஈ) ஒலிவடிவினன்

(ii) சமரச சன்மார்க்க சங்கத்தை எங்கு வள்ளலார் நிறுவினார் ?

(அ) திருவண்ணாமலை

(ஆ) கடலூர்

(இ) வடலூர்

(ஈ) மருதூர்

(iii) சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் ஒரு நோக்கம்

(அ) ஜாதிசமய வேறுபாடுகூடாது

(ஆ) உலகமக்கள் அனைவரும் உடன்பிறப்பே

(இ) உயிர்க்கொலை கூடாது

(ஈ) ஏழைகளின் பசிபோக்கவேண்டும்

(iv) பேரின்ப வீட்டின் திறவுகோல் எது ?

(அ) செல்வம்

(ஆ) கடவுள்பற்று

(இ) உயிர் இரக்கம்

(ஈ) உழைத்தல்

(v) எவ்வகை உலகைப்படைக்க வள்ளலார் விரும்பினார் ?

(அ) அழகான உலகை

(ஆ) போரில்லா உலகை

(இ) மக்கள் பெருகும் உலகை

(ஈ) வளமான உலகை

**14.** பின்வரும் பாடற்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள பல்வகை வினாக்களுக்கு விடைதருக.

மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோ ட்டம்மா என்
பால் நோக்கா யாகிலும் உன்பற்றலல்லால் பற்றிலேன்
தான் நோக்கா தெத்துயரும் செய்திடினும் - தார்வேந்தன்
கோல் நோக்கி வாழுங் குடிபோன்றி ருந்தேனே.

(i) வித்துவக்கோடு எச்சிறப்புடையது ?

(அ) திருமாலின் கோயில் கொண்ட சிறப்புஉடையது

(ஆ) மீன்கள் வாழும் நீள் வயல்களால் சூழப்பட்டது

(இ) பக்தர்கள் மிக்கது

(ஈ) குலசேகரரின் பெருமாள் திருமொழிச் சொற்றொடர்

(ii) தார் என்பதன் பொருள்

(அ) மலர்

(ஆ) மாலை

(இ) செங்கோல்

(ஈ) வாள்

(iii) குடிமக்கள் எவரது உதவியை எதிர்பார்ப்பர் ?

(அ) செல்வந்தர் உதவியை

(ஆ) நண்பரின் உதவியை

(இ) உறவினர் உதவியை

(ஈ) மன்னனது நல்லாட்சி எனும் உதவியை

(iv) இப்பாடலின் ஆசிரியர் யார் ?

(அ) நம்மாழ்வார்

(ஆ) பெரியாழ்வார்

(இ) குலசேகர ஆழ்வார்

(ஈ) கருடாழ்வார்

4

**15.** விளக்க விடை தருக (ஏதேனும் **ஒன்று** மட்டும்) *5*

(அ) இளமைப் பருவத்திலேயே உயரிய பண்புகளைக் காந்தியடிகள் பெறக் காரணங்களாக அமைந்தவை பற்றி விவரிக்க.

(ஆ) வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்க சங்கம் பற்றி விளக்குக.

(இ) விண்ணியல் அறிவு, பொறியியல் அறிவு ஆகியவற்றில் தமிழர் சிறந்திருந்தனர் என்பதை விளக்குக.

**16.** ஏதேனும் **ஒரு வினா**விற்கு மட்டும் விளக்க விடை தருக. *5*

(அ) முத்தமிழ் எவ்வெப்பொருளாய் விளங்குவதாகத் தமிழ் விடுதூது கூறுகிறது ? அவ்வாறு கூறக்காரணம் என்ன ? விவரிக்க.

(ஆ) பெரியாரைத் துணை கொள்வதால் பெறும் சிறப்பையும், துணை கொள்ளாதவிடத்து வரும் குற்றத்தையும் விவரி.

**17.** ஏதேனும் **ஒன்றனுக்கு** விடைதருக. *2*

(அ) வேலைக்காக எவர் காத்திருக்க வேண்டியதில்லை ?

(ஆ) வாழும் முறை பற்றி வள்ளலார் உலகிற்கு உரைத்தது யாது ?

**18.** ஏதேனும் **ஒன்றனுக்கு** விளக்கக் கட்டுரை எழுதுக. *6*

(அ) மாணவரும் நூலகமும் என்ற தலைப்பில் விளக்கக்கட்டுரை எழுதுக.

(ஆ) அயோத்திதாசர் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டுகளை விவரிக்க.

**19.** ஏதேனும் **ஒருவினா**விற்கு விடைதருக. *3*

(அ) குறட்டை ஒலியில் வரும் மூன்று குடும்பங்கள் பற்றி எழுதுக.

(ஆ) தொல்லியலின் முக்கிய நோக்கம் பற்றி எழுதுக.